# 8

# சமூக, பொருளாதார நிலைமைகளில் இளவயது திருமணங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் - மாவடிவேம்பு 01 கிராமசேவகர் பிரிவை மையப்படுத்திய சமூகவியல் ஆய்வு

ராஜேந்திரன் கிருஷிகா

## Abstract

Child's rights and child protection are important issues in the world. Similarly, child marriage is also considered as a violation of children's rights. Child marriage refers to the illegal cohabitation of one or both persons under the age of 18. Child marriage is defined as an illegal act before the age of 18 (World Bank, 2017). In this way Mavadivembu - 01 GN division under the Eravur Parttu Divisional Secretariat in Batticaloa District in the Eastern Province of Sri Lanka has been identified by the Eravur Divisional Secretariat as the area with the highest rate of child marriages. Thus for the purpose of this study 100 samples were selected for data collection based on randam simple sampling. In addition, primary sources such as interviews, observations, questionnaires, discussions, and secondary sources such as articles, journals, reports, circulars, sub-dimensions of already published studies, reports obtained from the Divisional Secretariat, Grama Niladhari statistical data and websites have also been used. Among the Grama Niladhari Division, there are many reasons such as lack of education, poverty, school dropout, parental insecurity, increase in technological devices, war etc that lead to child marriages. It has been found through this study that the child marriage that takes place due to such reasons causes many physical, psychological, social, economic, cultural and legal problems among the concerned parties and creates an unstable and deviant society. Overall, 60 percent of people are affected by social impacts, 80 percent of people are affected by economic impacts, 40 percent of people are affected by physical and psychological problems, 50 percent of children and the elderly are affected, and 45 percent of people face legal problems.

**Key Words:** Child Marriage, Social, Economic, Issues

**ஆய்வுச்சுருக்கம்**

உலகளாவிய ரீதியில் முக்கியப்படுத்தப்படும் விடயங்களில் சிறுவர் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு என்பன முக்கியமான எண்ணக்கருக்களாக அமைகின்றன. அவ்வகையிலேயே இளவயது திருமணமும் சிறுவர்களது உரிமை மீறலாக கொள்ளப்படுகின்றது. அதாவது இளவயது திருமணம் என்பது 18 வயதை எட்டாத ஒருவர் அல்லது இருவரும் சட்டரீதியற்ற வகையில் இணைந்து வாழ்கின்ற நிலையை குறிக்கின்றது. குழந்தைத் திருமணம் என்பது 18 வயதுக்கு முன் நடக்கும் சட்டரீதியற்ற நிகழ்வு என வரையறுக்கப்படுகிறது (உலக வங்கி, 2017). இவ்வகையில் இன, மத, மொழி பேதமின்றி அனைத்து இடங்களிலும் இளவயது திருமணம் இடம்பெற்றுவருகின்ற நிலையில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட மாவடிவேம்பு – 01 கிராமசேவகர் பிரிவானது அதிகளவு இளவயது திருமணம் இடம்பெறும் பிரதேசமாக ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப்பிரிவால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில் இவ்வாய்வின் பொருட்டு 100 மாதிரிகள் எளிய எழுமாற்றுத்தெரிவின் அடிப்படையில் தரவு சேகரிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் நேர்காணல், அவதானம், வினாக்கொத்துமுறை, கலந்துரையாடல்கள் போன்ற முதலாம் நிலைத்தரவுகளும், இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள், சுற்று நிரூபங்கள், ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆய்வுகளின் உட்பரிமாணங்கள், பிரதேச செயலகம், கிராம சேவகரிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகள், புள்ளிவிபர எண்ணிக்கையிலான தரவுகள் மற்றும் இணையத்தளம் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறித்த கிராமசேவகர் பிரிவில் குறைவான கல்வி அறிவு, வறுமை, பாடசாலை இடைவிலகல், பெற்றோரின் பாதுகாப்பின்மை, தொழில்நுட்பசாதனங்களின் அதிகரிப்பு, யுத்தம் போன்ற பல காரணங்கள் இளவயது திருமணங்கள் இடம்பெறுவதற்கு தூண்டுகோலாக அமைகின்றது. இவ்வாறான காரணங்களால் இடம்பெறும் இளவயது திருமணமானது குறித்த தரப்பினர் மத்தியில் உடல், உள, சமூக, பொருளாதார, கலாசார, சட்ட ரீதியாக பல பிரச்சினைகளை தோற்றுவிப்பதோடு நிலையற்ற பிறழ்வான சமூகத்தை தோற்றுவிப்பதும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக சமூக தாக்கங்களால் 60 வீதமானவர்களும், பொருளாதார தாக்கங்களால் 80 வீதமானவர்களும், உடல் உள பிரச்சினைகளால் 40 வீதமானவர்களும், 50 வீதமான சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் பாதிக்கப்படுவதும், 45 வீதமானவர்கள் சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதும் இவ்வாய்வின் மூலம் வெளிப்படுகின்றது.

**திறவுச் சொற்கள் (Keywords):** சிறுவர் திருமணம், சமூகம், பொருளாதாரம், பிரச்சினைகள்.

## 1. ஆய்வு அறிமுகம்

இன்றைய நவீன தொழில்நுட்ப யுகத்தில் அறிவியல் ரீதியாக பல்வேறு மாற்றங்களும், வளர்ச்சியும் ஏற்பட்டு வரும் பட்சத்தில் இன்றும் பல சமூகங்கள் அறியாமை என்ற இருளில் அகப்பட்டு பல சமூக, பொருளாதார , கலாசார பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதை நாளாந்தம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. அவ்வகையிலேயே உலகலாவிய ரீதியில் இளவயது திருமணமும் பாரிய சமூகப் பிரச்சினையாக நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற பட்சத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாவடிவேம்பு 01 கிராம சேவகர் பிரிவிலும் இளவயது திருமணமும் சமூகக்கட்டமைப்பின் சிதைவுக்கும், சமூகம் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவும் காரணமாக அமைகின்றதை காணலாம். இளம் வயதிலேயே இல்லற வாழ்வில் இணைகின்ற ஒருவரோ அல்லது இருவரோ 18 வயதினைப் பூர்த்தி செய்யாதவராக இருப்பின், குறித்த இரு நபர்களுக்கிடையில் இடம் பெறும் சட்டபூர்வமற்ற அல்லது சடங்கு ரீதியான பந்தத்தினை வழங்குவதை சிறுவர் திருமணம் அல்லது இளவயது திருமணம் என வரையறுக்கலாம்.
சமூகத்தினதும், தனிமனிதனினதும் நல்வாழ்வுக்காக திருமணம் எனும் நிறுவனமயப்படுத்தப்பட்ட நடைமுறை இடம்பெற்று வருகின்றது (Narayanan, 2017). திருமணம் என்பது சமூக, சட்ட, உறவுமுறை சார்ந்த விடயங்களுடன் நேரடியாகத் தொடர்புபடும் ஒன்றாகும் (Scott, 2000). குடும்பம், பாலுறவு, இனப்பெருக்கம், பொருளாதாரப் பாதுகாப்பு போன்ற பல காரணங்களுக்காக திருமணம் மேற்கொள்ளப்படுகின்றது (Zahidlawassociates, 2019). மனித இனத்தைப் பொறுத்தவரை திருமணம் என்பது ஒரு இயற்கை உணர்வாக காணப்படுகின்ற போதிலும், அதில் பல்வேறு பண்பாட்டுக் கலாசார சமூக நெறிமுறைகள் காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. இளவயதுத் திருமணம் என்பது 18 வயதுக்குக் குறைந்த ஆண் மற்றும் பெண் சிறுவர்கள் முறையான திருமண ஒப்பந்தத்தின் கீழோ அல்லது முறையற்ற திருமண ஒப்பந்தத்தின் கீழோ ஒன்றாக இணைந்து வாழ்வதைக் குறிக்கின்றது (UNICEF: South Asia, 2017), மேலும், சிறுவர் திருமணம் என்பது, திருமண வயதை அடையாத (18 வயதை அடையாத) ஆண், பெண் இரு பாலினருக்கும் இடையில் நடத்தப்படும் ஒரு திருமணம் ஆகும் (Quentin Wodon ect. al, 2007).

உலக சுகாதார ஸ்தாபனம் சிறுவர்களை ‘‘வளரிளம் பருவம்’’ என்ற பதத்தின் கீழ் மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் இளவயது திருமணங்கள் நகரப் பிரதேசங்களைக் காட்டிலும், கிராமப்புறங்களிலும், கல்வி கற்ற குடும்பங்களிலும் பார்க்க கல்வியறிவு குறைந்த குடும்பங்களிலும் இளவயது திருமணங்கள் சாதாரணமாக இடம் பெறுவதாக அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. இலங்கையில் சிறுவயது திருமணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக யுனிசெப் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. இதற்கு பிரதானமான காரணமாக குடும்ப பொருளாதார சூழல், போதிய அறிவு இன்மை என்பனவே காரணாகும்.

இலங்கையை பொறுத்தவரையில் பொதுவான திருமண வயது பதினெட்டு ஆகும். 1995 ஆம் ஆண்டில் 1907 ஆம் ஆண்டின் பொது திருமண சட்டம் மற்றும் 1952 ஆம் ஆண்டின் திருமண மற்றும் விவாகரத்து சட்டம் ஆண்- பெண்

இருபாலாருக்குமான திருமண வயதெல்லை 18 ஆகும் வகையில் திருத்தப்பட்டது. இதனால் இலங்கையின் பொது சட்டம் 18 வயதுக்குட்பட்டோர் திருமணம் செய்வதை அனுமதிக்கவில்லை.

தென்னாசியா சிறுவர் திருமண எண்ணிக்கையில் உயர் அளவுகளை கொண்டிருக்கும் அதேவேளையில், இப் பிரச்சினையை கட்டுப்படுத்திக் கொள்வதில் வெற்றியும் கண்டுள்ளது. கிடைக்கும் புள்ளிவிபரங்களின் பிரகாரம் 2005-2012 காலப்பகுதியில் இலங்கையில் 15 வயதிற்கு முன்னர் திருமணம் செய்யும் பிள்ளைகளின் எண்ணிக்கை 2 சதவீதமாக இருந்து வந்ததுடன், 18 வயதிற்குள் திருமணம் செய்து வரும் பிள்ளைகளின் எண்ணிக்கை 12 சதவீதமாக காணப்பட்டது என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி மட்டம், வசிக்கும் இடம் மற்றும் வாழ்க்கைத் தரங்கள் என்பன சிறுவர் திருமண வழமையின் மீது செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. அந்த வகையில் நகரப் பிரதேசங்களிலும் பார்க்க கிராமப் பிரதேசங்களிலும், கல்விகற்ற குடும்பங்களிலும் பார்க்க கல்வியறிவு குறைந்த குடும்பங்களிலும் சிறுவர் திருமணங்கள் சாதாரணமாக இடம்பெற்று வருகின்றன. போர் இடம்பெற்ற காலப்பகுதியில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வசித்து வந்த குடும்பங்களுக்கு மத்தியில் சிறுவர் திருமணங்கள் சர்வ சாதாரணமாக இடம்பெற்று வந்தன.

இலங்கையில் பல்வேறு காரணங்களினால் சிறுவர் திருமணங்கள் இடம்பெற்று வருகின்றன. போர், நிதி மற்றும் உடல் ரீதியான பாதுகாப்பின்மை என்பன பொதுவான காரணங்களாக இனங்காணப்பட்டிருக்கும் அதே வேளையில், போருக்கு பிற்பட்ட காலப்பகுதியில் சிறுவர் திருமண வழமையை கலாசார ரீதியில் சகித்துக் கொள்ளும் ஒரு மனப் போக்கு தென்பட்டு வருகின்றது. இந்த நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். திரைப்படங்கள், தொடர் நாடகங்கள், இணையப் பாவனை எனப் பல்வேறு காரணங்களால் சிறுவர் திருமணங்கள் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது. இவற்றை வெளிப்படுத்தும் வகையிலே இவ்வாய்வுக்கட்டுரையும் அமைந்துள்ளது.

## 1.1. ஆய்வுப்பிரச்சினை

இன்றைய நவீனமயமாக்கலாலும், தொழில்நுட்ப வசதியினாலும் சமூகத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் அதிகரித்து வருகின்ற அதேபட்சத்தில் இளவயது திருமணமும் சமூகத்தில் பல்வேறுபட்ட சிக்கல்களை தோற்றுவிக்கின்ற சமூகப்பிரச்சினையாக கொள்ளப்படுகின்றது. இளவயதுத் திருமணம் ஆண், பெண் சிறுவர்களின் வாழ்வில் பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. குறித்த இந்நடைமுறை மூலம் பெண் குழந்தைகள் பாலியல் சுகாதார மற்றும் நல்வாழ்வு பற்றிய தீர்மானங்கள் எடுக்கும் உரிமைகள் தடைப்படுவதுடன், சிறுவர்கள் கல்வியிலிருந்து தூரப்படுத்தி ஒரு நெருக்கடியான வாழ்க்கைக்குள் தள்ளுவதன் மூலம் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை, துஸ்பிரயோகங்கள், உடல், உளவியல் பாதிப்புகள் மற்றும் இளவயது மரணம் போன்ற ஆபத்துக்களுக்கு வித்திட்டுள்ளது (Plan International, 2021). இவ்வகையிலே மாவடிவேம்பு – 01 கிராமசேவகர் பிரிவில் அதிகரித்து வருகின்ற இளவயது திருமணமானது குறித்த தரப்பினர் மத்தியில் உடல், உள ரீதியாக மட்டுமின்றி சமூக, பொருளாதார, கலாசார

நிலைமைகளிலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது. குறிப்பாக இளவயதில் திருமணத்தை மேற்கொண்ட தரப்பினர் மத்தியில் மாணவர் இடைவிலகலை ஏற்படுத்துகின்றது. இதனால் கல்வி ரீதியில் விழிப்புணர்வற்ற சமுதாயமாக குறித்த கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட மக்களில் அநேகமானோர் காணப்படுகின்றனர். இதனால் குடும்பத்தில் புரிந்துணர்வற்ற நிலைமை ஏற்பட்டு குடும்ப பிரச்சினைகளுக்கும், முரண்பாடுகளுக்கும் வழிவகுக்கின்றது.

இதனைத் தொடர்ந்து விவாகரத்து, குடும்ப பிரிவு, மறுமணம், தற்கொலை, வறுமை, பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்ணாக செல்லுதல், இதனால் ஒட்டுமொத்தமாக அக்குடும்பத்திலுள்ள சிறுவர்கள் பாதிக்கப்படல், சமூக நல்லிணக்கமற்ற நிலைமை தோன்றுதல், கலாசார ரீதியில் பாராபட்சப்படுத்தப்படல், புறக்கணிக்கப்படல் என பல எதிர்மறையான விளைவுகள் ஏற்படுகின்றது. இவை அனைத்திற்கும் அடிவேராக இளவயது திருமணம் அமைகின்றது.

மேலும் இளவயதில் திருமணம் செய்வதால் திருமணப்பதிவை வைப்பதில் சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தல், உடல் ரீதியான ஆரோக்கியமற்ற ஊட்டச்சத்தற்ற குழந்தைகளை பிரசவித்தல், ஊட்டச்சத்தற்ற உடல் நிலைக்கு உள்ளாதல், இதனால் நோய்வாய்ப்பட்ட சமுதாயம் உருவாதல் என பல்வேறு எதிர்மறையான விளைவுகள் இளவயது திருமணத்தின் மூலம் ஏற்படுகின்றதை இவ்வாய்வுப்பிரதேசத்தில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

## 1.2. ஆய்வுக்கருதுகோள்

இவ்வாய்வுப்பிரச்சினைக்குரிய ஆய்வுக்கருதுகோளாக குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் குடும்பங்களின் நிலையும், விழுமியங்கள், பண்பாட்டம்சங்கள், சமூக, பொருளாதார, கலாசார, அரசியல், சூழல்சார் பின்னணியும் இளவயது திருமணங்களின் அதிகரிப்பிற்கும் அதனால் ஏற்படும் சமூக, பொருளாதார எதிர்மறையான விளைவுகளுக்கும் காரணமாகின்றன.

## 1.3. ஆய்வின் நோக்கங்கள்

இவ்வாய்வானது பிரதான நோக்கம், உபநோக்கம் இரு அடிப்படையில் நோக்கப்படுகின்றது.

### 1.3.1. பிரதான நோக்கம்

இளவயது திருமணமானது குறித்த தரப்பினர் மத்தியில் உடல், உள, சமூக, பொருளாதார, கலாசார ரீதியில் ஏற்படுத்தும் விளைவுகளை கண்டறிதல்.

### 1.3.2. உபநோக்கங்கள்

1. இளவயது திருமணத்தை தூண்டும் காரணிகளை கண்டறிதல்
2. இளவயது திருமணத்தை மேற்கொண்ட குடும்பத்தின் சமூக, பொருளாதார நிலைமைகளைக் கற்றல்.
3. இளவயது திருமணத்தின் தாக்கங்களை ஆராய்தல்.
4. அவற்றிற்கான தீர்வாலோசனைகளை முன்வைத்தல்.

### 1.3.3. ஆய்வு வினாக்கள்

1. இளவயது மேற்கொண்டமைக்கான காரணங்கள் எவை?
2. இளவயது திருமணமத்தால் குறித்த தரப்பினர் உடல், உள, சமூக, பொருளாதார, சட்ட ரீதியாக எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர்?
3. இதனால் ஏற்படும் விளைவுகள் எவை?
4. இவற்றிலிருந்து விடுபட்டு சிறந்த சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகள் எவை?

### 1.3.4. ஆய்வு முறையியல்

இவ்வாய்வில் எண்ரீதியான ஆய்வு, தரரீதியான ஆய்வு ஆகிய இரு முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

#### 1.3.4.1. தரவு சேகரிக்கும் முறைகள்

அதேபோன்று இவ்வாய்வில் தரவுகள் சேகரிக்கும் பொருட்டு முதனிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் என இரு வகைகளிலும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவு சேகரிக்கும் முறைகளாக நேர்காணல், வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானிப்புக்கள், பங்கு பற்றி அவதானித்தல், தனியாள் விடய ஆய்வு, மையக் குழு கலந்துரையாடல் போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது இளவயதில் திருமணம் செய்து கொண்ட பெண்களிடமும், ஆண்களிடமும் நேரடியாக சென்று வினாக்கொத்து மூலமும், நேர்காணல், கலந்துரையாடல் மூலம் ஆய்வுக்கான முதலாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டது. ஆண்களிடம் 30 வினாக்கொத்துக்களும், பெண்களிடம் 70 வினாக்கொத்துகளும் பெறப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. தனியாள் விடய ஆய்வுக்காக இளவயதில் திருமணம் மேற்கொண்டதன் காரணமாக ஏற்பட்ட சமூக, பொருளாதார பிரச்சினைகளால் தற்கொலை செய்து கொண்ட நபர்களின் குடும்பங்களிடமிருந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டது. இவை தவிர 10 சிறுவர்களிடமும், 10 முதியவர்களிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டும் தரவுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த பிரதேசத்தின் கிராம சேவகர், அபிவிருத்தி உத்தியோகஸ்தர், சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், மகளிர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், இளவயதினை மேற்கொண்ட குடும்பத்திலுள்ள சிறுவர்கள், அக்குடும்ப உறுப்பினர்கள், குடும்ப நல உத்தியோகஸ்தர், உளவளத்துணை ஆலோசகர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல், நேர்காணல், வினாக்கொத்து என்பவற்றினை கொண்டும் இவ்வாய்வுக்கான முதலாம் நிலை தரவுகள் பெறப்படுகின்றன.

இரண்டாம் நிலைத்தரவுகள் என்பது குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பாக ஏற்கனவே தயாரிக்கப்பட்ட தகவல்களையும், புள்ளிவிபர விடயங்களையும், பல்வேறு அமைப்பினரின் தரவுகளையும் ஆய்விற்காக பெற்றுக்கொள்வதாகும். அந்தவகையில் இவ் ஆய்வில் இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை

உள்ளடக்கியவாறான நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள், சட்டங்கள், சுற்று நிரூபங்கள், ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆய்வுகளின் உட்பரிமாணங்கள், புள்ளி விபர தரவுகள், பிரதேச செயலகம், கிராம சேவகரிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகள், புள்ளிவிபர எண்ணிக்கையிலான தரவுகள் மற்றும் இணையத்தளம் என்பவற்றின் மூலம் இவ் ஆய்விற்கான இரண்டாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டுள்ளது.

### 1.3.4.2. மாதிரி முறைகள்

ஆய்வுப்பிரதேசமான மாவடிவேம்பு – 01 பிரதேசத்தில் 1056 குடும்பங்கள் காணப்படுகின்றனர். இதில் ஆண்கள் 1842 பேரும், பெண்கள் 1776 பேரும் ஆவர். மொத்த சனத்தொகை 3618 ஆகும். இவ்வாய்வின் பொருட்டு தரவுகளை சேகரிப்பதற்காக நிகழ்தகவு சார் மாதிரியில் உள்ளடங்கும் எளிய எழுமாற்று மாதிரி (simple random sampling) பயன்படுத்தப்படுகின்றது. இவ்வகையில் மாவடிவேம்பு – 01 கிராமசேவகர் பிரிவில் உள்ள 1056 குடும்பங்களில் 100 மாதிரிகள் எளிய எழுமாற்றுத்தெரிவின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுகின்றனர். ஆண்களிடம் 30 வினாக்கொத்துக்களும், பெண்களிடம் 70 வினாக்கொத்துகளும் பெறப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை தவிர 10 சிறுவர்கள் மற்றும் 10 முதியவர்களிடம் நேர்காணல் அடிப்படையிலும் தரவுகள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

| பால் | மொத்த சனத்தொகை | மாதிரி |
|---|---|---|
| **ஆண்கள்** | 1842 | 30 |
| **பெண்கள்** | 1776 | 70 |
| **மொத்தம்** | 3618 | 100 |

**மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது.**

## 1.4. ஆய்வின் வரையறைகள்

இவ்வாய்வில் ஆய்வு விடயமாக இளவயது திருமணத்தால் குறித்த தரப்பினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சமூக, பொருளாதார, உடல், உள, கலாசார பிரச்சினைகள் என வரையறுக்கப்படுகின்றது. ஆய்வுப்பிரதேசமாக ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட மாவடிவேம்பு 01 கிராசேவக பிரிவாக வரையறுக்கப்படுகின்றது.

## 2. இலக்கிய மீளாய்வு

Seri Aryati, Sofi Yulianti & Rahma Hardinasari ஆகியோரால் ***"யோககர்த்தாவில் இளவயது திருமணம் (Early marriage in Yogyakarta)", (2020)*** எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட ஆய்வுக்கட்டுரையானது யோககர்த்தாவில் இளவயது திருமணத்தை தீர்மானிக்கும் காரணிகளையும், இளவயது திருமணத்தின் தாக்கத்தை தீர்மானிப்பதையும் நோக்கமாக கொண்டது. ஆய்வின் முடிவாக இளவயது திருமணமானது சுற்றுச்சூழல் காரணிகள் மற்றும் பொருளாதார பின்னணியால்

மட்டுமல்ல. இது பிள்ளைகளின் இடைவினையையும், தொடர்பையும் உருவாக்கும் உலகமயமாக்கல் சகாப்தத்துடன் தொடர்புடையது. பெற்றோரின் மேற்பார்வையின்மை, வேலைவாய்ப்பின்மை, வறுமை, பொருளாதார பின்னணி என்பன இளவயது திருமணத்தை ஏற்படுத்தும் காரணிகளாகும். இவை சிறுவர்களின் கல்வியினை தடைப்படுத்தி இளவயதில் திருமணத்தை மேற்கொண்டு உடல், உள, சமூக, பொருளாதார பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றதாக இவ்வாய்வு சுட்டிக்காட்டுகின்றது.

Ifna Rosydah, Taty Hernawaty, Imas Rafiyah ஆகியோரால் "இளவயது திருமணத்தால் கர்ப்பம் தரிப்பதில் ஏற்படும் தாக்கம் : இளம் பெண்களினுடைய அறிவு (The impact of early marriage on pregnancy : Young Women's knowledge)", (2019) எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட ஆய்வுக்கட்டுரையானது மார்கஜய பொது சுகாதார மையத்தில் கர்ப்பத்தில் இளவயது திருமணத்தின் தாக்கம் குறித்த இளம் பெண்களின் அறிவை தீர்மானிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இளவயது திருமணமானது பெண்கள் மத்தியில் ஏற்படுத்தும் பாதிப்புக்களை விளக்குகின்றது. குறிப்பாக இளவயது திருமணமானது பெண்களின் கர்ப்பத்தில் பிரச்சினையை ஏற்படுத்துகின்றது. இதனால் தாய் மற்றும் குழந்தைகள் என 99% மரணிக்கின்றனர்.

Dr. Prosannajid Sarkar என்பவரால் "பங்களாதேஷில் இளவயது திருமணத்தின் தீர்மானங்கள் மற்றும் விளைவு (Determinants and effect of early marriage in Bangladesh, 2007), 2009 எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட ஆய்வுக்கட்டுரையானது பங்களாதேசில் இளவயது திருமணமானது எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதையும், அதற்கான காரணங்களையும் விளக்குகின்றது. பங்களாதேசில் 20 ஆண்டுகளுக்கு முன்னர் பெண்கள் இளவயதிலிருந்து பாலியல் ரீதியான செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளதாக ஆய்வின் முடிவு காட்டுகின்றது. இளவயது திருமணமானது விவாகரத்து மற்றும் மறுமணம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது மற்றும் தாமதமான திருமணமும் பெண்களின் கல்வி, வயது வந்தோரின் கல்வியறிவு மற்றும் திருமண வாழ்க்கையின் தரம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் தொடர்புடையது. இஸ்லாம்மதத்தில் இளவயது திருமணமானது அதிகமாக இடம்பெறுகின்றது. இளவயது திருமணமானது பங்களாதேஸில் பெண்களின் கருத்தரித்தல் தொடர்பில் அதிக பிரச்சினையை ஏற்படுத்துகின்றதை ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது.

Dana Tilson & Ulla Larsen ஆகியோரால் "எத்தியோப்பியாவில் விவாகரத்து: இளவயது திருமணம் மற்றும் குழந்தை இல்லாததன் தாக்கம் (Divorce in Ethiopia: The impact of early marriage and childlessness)", (2000) எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட ஆய்வுக்கட்டுரையானது எத்தியோப்பியாவில் இளவயது திருமணமானது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதை சுட்டிக்காட்டுகின்றது. எத்தியோப்பியாவில் விவாகரத்து இடம்பெறுவதற்கு இளவயது திருமணமும் ஒரு காரணமாக அமைகின்றது என விளக்குகின்றது. கடந்த 30 ஆண்டுகளில் 45 வீதமான பெண்களின் திருமண வாழ்வு விவாகரத்தில் முடிவடைகின்றது. அத்துடன் இவ்வாய்வில் விவாகரத்து ஏற்படுவதற்கு இரண்டு காரணங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றது. இளவயதில் திருமணம் செய்தல், மற்றயது முதல் திருமணத்தில் குழந்தைகள் இல்லாதமை என்பனவாகும். இவை இரண்டும் விவாகரத்தை ஏற்படுத்தும் காரணிகளாக தாக்கம் செலுத்துகின்றது. திருமண வயது மற்றும் விவாகரத்து என்பவற்றிற்கிடையில் ஒரு எதிர்மறையான விளைவு

ஏற்படுகின்றது. முதல் திருமணத்திற்குள் ஒரு குழந்தை இருப்பது விவாகரத்து அபாயத்தை கணிசமாகக் குறைக்கின்றது. மேலும் பல் கலாசாரம் மற்றும் சமூக பொருளாதார மாறிகள் விவாகரத்தின் கணிசமான கணிப்பாளர்களாக இருந்தன.

Ilknur Yüksel-Kaptanoglu & Banu Akadli Ergocmen என்பவரால் "இளவயது திருமணம்: 1978- 2008 இல் துருக்கியின் போக்குகள் (Early Marriage: Trends in Turkey, 1978-2008)", (2014) எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட இவ் ஆய்வுக்கட்டுரையானது 1978- 2008 வரையான 30 வருடகாலத்தில் இளவயது திருமணத்துடன் தொடர்புடைய காரணிகளை பகுப்பாய்வு செய்கின்றது. 18 வயதிற்கு முன்னர் திருமணம் செய்த 20 முதல் 24 வயதுடைய அனைத்து பெண்களின் விகிதமும் 1978 இல் 38% ஆக இருந்து 2008 இல் 14% ஆகக் குறைந்தது. 20 முதல் 24 வயது வரையிலான திருமணமான பெண்களுக்கு கல்வி போன்ற பொதுவான விளக்க மாறிகள் குறித்த ஆபத்து காரணிகளை ஆராய்கிறது. பெண்களைப் பொறுத்தவரை, இளவயது திருமணம் என்பது இரண்டு கணக்கெடுப்புகளிலும் உள்ள அனைத்து விளக்க மாறுபாடுகளுடன் தொடர்புடையது. பெண்களின் கல்வி மற்றும் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் பாலின சமத்துவத்தை அடைவது இளவயது திருமணத்தின் சிக்கலைச் சமாளிப்பதற்கும் குழந்தை திருமணத்தை அகற்றுவதற்கும் அத்தியாவசிய நடவடிக்கைகளாக வெளிப்படுகின்றன.

Saima Mughal, Ghafoor Abdul, Dr.Abdul Ghafoor Awan ஆகியோரால் "சிறுமிகளின் கல்வியில் இளவயது திருமணங்கள் ஏற்படுத்தும் விளைவுகள் (Effects of Early Marriages on Girls' Education)" , (2020) எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட இவ் ஆய்வுக்கட்டுரையானது இளவயது திருமணமானது சிறுமிகளின் கல்வியில் ஏற்படுத்தும் பாதிப்புக்களை விளக்குகின்றது. இளவயது திருமணமானது பாடசாலை செல்லும் சிறுமியர்களுக்கு இடம்பெறும் சமூக- கலாசார நிகழ்வாகவே இவ்வாய்வின் முடிவில் எடுத்துக்காட்டப்படுகின்றது. இளவயது திருமணத்தின் விளைவுகளை அறிய திருமணமான 50 சிறுமியர்களிடம் குறிப்பாக 15-30 வயது வரை தரவுகள் சேகரிக்கப்பட்டது. இதில் 92 வீதமானவர்கள் இளவயது திருமணத்தின் மூலம் தமது வாழ்க்கையில் எதிர்மறையான விளைவுகள் ஏற்படுவதாகவும், 92 வீதமானவர்களும் வறுமை காரணமாக தாம் இளவயதில் திருமணம் செய்ததாகவும் கருத்து தெரிவித்தனர். வறுமை மற்றும் கலாசாரம் குழந்தை திருமணத்திற்கு இரண்டு முக்கிய காரணங்கள். ஆனால் இதுபோன்ற திருமணங்கள் வெவ்வேறு உடல், சமூக, மன, உணர்ச்சி மற்றும் நிதி சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன. எனவே ஆய்வின் முடிவாக இளவயது திருமணமானது பல எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்துகின்றது.

Srinivas Goli, Anu Rammohan, Deepti Singh ஆகியோரால் "The Effect of Early Marriages and Early Childbearingon Women's Nutritional Status in India", (2015) எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட ஆய்வுக்கட்டுரையானது இந்தியாவில் இளவயது திருமணமானது பெண்களின் ஊட்டச்சத்தில் ஏற்படுத்தும் விளைவுகளை ஆராய்கின்றது. இந்தியாவில் பெண்களின் வளர்ச்சி மற்றும் ஊட்டச்சத்து நிலை குறித்த ஆரம்பகால குழந்தைகளின் விளைவுகள் முந்தைய ஆய்வுகளில் குறிப்பிடப்படவில்லை. இளவயது திருமணத்திற்கும், இந்தியப் பெண்களின் ஊட்டச்சத்து நிலையைப் பற்றிய ஆரம்பகால குழந்தைகளுக்கும் இடையிலான

தொடர்பை பகுப்பாய்வு செய்வதை இவ் ஆய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வானது 18 வருடத்திற்கு முன்னர் பீகார் மற்றும் ஆந்திர மாநிலங்களில் 18 வயதிற்கு முன்னர் திருமணம் செய்த பெண்களை மையமாக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதிக விகிதமானோர் இளவயதில் கர்ப்பம் ஆகின்றனர். இளவயது பிரசவமானது இப் பெண்களை அனிமியா நோய்க்கு உட்படுத்துகின்றது. அத்துடன் ஊட்டச்சத்து குறைபாடும் ஏற்படுத்துகின்றது. எனவே இவ்வாய்வானது பெண்களிடையே ஊட்டச்சத்து நிலை மற்றும் சுகாதாரப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கு உதவும். இதன் மூலம் தாய் மற்றும் குழந்தை இறப்பு மற்றும் பிறவற்றைத் தடுக்கிறது.

B சுரேஸ் லால் என்பவரால் ‘‘இந்தியாவில் இளவயது திருமணம்: காரணிகளும் பிரச்சினைகளும் (Child Marriage in India: Factors and Problems), (2015) எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட ஆய்வுக்கட்டுரையானது இந்தியாவில் அதிகளவில் இளவயது திருமணம் இடம் பெறுவதற்கான காரணங்களையும், அதனால் ஏற்படும் பிரச்சினைகளும் ஆராய்கின்றது. இளவயது திருமணமானது இந்தியாவில் காணப்படும் முக்கிய பிரச்சனைகளில் ஒன்று. குழந்தைகள் உடல் மற்றும் மன முதிர்ச்சிக்கு முன்பே திருமணம் செய்து கொண்டனர். இந்தியாவில் இவ்வாறு சிறுவர் திருமணம் இடம்பெறுவதற்கு முக்கிய காரணங்களாக மத மரபுகள், சமூக நடைமுறைகள், பொருளாதார காரணிகள் மற்றும் ஆழமாக வேரூன்றியுள்ள சிக்கலான எண்ணங்கள் போன்றவையாகும். அதன் வேர்களைப் பொருட்படுத்தாமல், சிறுவர் திருமணம் என்பது மனித உரிமைகளை முற்றிலும் மீறுவதாகும். இது உடல், உளவியல் மற்றும் உணர்ச்சி வடுக்களை வாழ்க்கைக்கு விட்டுச்செல்கிறது. திருமணத்திற்குப் பிறகு பாலியல் செயல்பாடு விரைவில் தொடங்குகிறது, மேலும் சிறு வயதிலேயே கர்ப்பம் மற்றும் பிரசவம் ஆகியவை தாய்வழி மற்றும் குழந்தை இறப்புக்கு வழிவகுக்கும். மேலும், இளையவர்களை திருமணம் செய்யும் பெண்கள் வீட்டிற்குள் வீட்டு வன்முறையை அனுபவிக்கும் வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றது.
அத்துடன் இளவயது திருமணத்தினை ஊக்குவிப்பதற்கான காரணங்கள் தொடர்பாகவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக பெண்கள் கல்விக்காக செலவிடும் பணத்தை குறைப்பது, திருமணச் செலவுகளை குறைப்பதற்காக, சொத்தின் பங்கை குறைப்பது, குடும்ப வறுமை, சமூக பாதுகாப்பின்மை, அநாதைக்குழந்தைகள் அல்லது ஒற்றைப் பெற்றோர் குடும்பங்களின் நிலை என்பன இளவயது திருமணத்தை ஏற்படுத்தும் காரணங்களாகும். அத்துடன் இளவயது திருமணத்தினால் ஏற்படும் பிரச்சனைகளை நோக்கும் போது இந்திய சமுதாயத்தில் திருமணம் செய்து மாமியார் வீட்டில் வசிப்பதால் அதிக சுமை ஏற்படுகின்றது. இளவயதில் கர்ப்பம் தரிப்பதால் உடல், உள ரீதியான சுகாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தல், இளவயதில் திருமணம் செய்யும் சிறுவர்கள் நவீன தொழில்நுட்ப கல்வி அறிவு குறைந்தவர்களாகவும், அறியாமையுள்ளவர்களாகவும் இருப்பதால் அதிகளவு கருவுறுதலும், குழந்தைகளை சுமப்பதற்கும் உள்ளாக்கப்படுகின்றனர், குடும்பங்களைத் திட்டமிடவோ அல்லது நிர்வகிக்கவோ இயலாமை, இந்திய சமுதாயத்தில் ஆண்குழந்தைக்கே முன்னுரிமை கொடுக்கப்படுவதால் ஆண்குழந்தையை பெறும் வரை இளவயதில் திருமணமான சிறுவர்கள் கருத்தரிக்க நிர்ப்பந்திக்கப்படுதல், பெண்குழந்தை பிரசவிக்கும் பட்சத்தில் உள ரீதியாக பாதிக்கப்படல், இளவயது திருமணமான தம்பதிகளில் ஆண்கள் அதிக வயதுடையவர்களாகவும், அதிகமாக பெண்களே இளவயதினராக இருப்பதால் தாம் தொடர்ந்து குழந்தையாக இருக்க வேண்டிய கட்டாயப்பாடும், கருத்துச்

சுதந்திரமின்மையும், கணவருக்கு கட்டுப்பட்டு வாழவேண்டிய நிலையும் காணப்படுகின்றது, பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாலியல் ஆரோக்கியத்தில் பாதிப்பு என்பன ஏற்படுகின்றமை இவ்வாய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

Zannatul Ferdous Shammi, Md. Thuhid Noor Muinul Habib Noman & Md. Mahadi Hasan ஆகியோரால் "Impact of Child Marriage on the Slum People of Rangpur City", (2018) எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட ஆய்வுக்கட்டுரையானது ரங்பூர் சேரி புற மக்களில் இளவயது திருமணமானது ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பீடு செய்கின்றதாக அமைகின்றது. இவ் ஆய்வில் 16 வீதமானோர் 14 வயதிற்கு உட்பட்டவர்கள், 36 வீதமானோர் 14-15 வயது இடைவெளியில் திருமணம் செய்து கொண்டனர், 26 வீதமானோர் 16 வயதுக்குட்பட்ட திருமணமானவர்கள் மற்றும் 22 வீதமானோர் 16 முதல் 18 ஆண்டுகளுக்கு இடையில் திருமணமானவர்கள் என்பது வெளிப்பட்டது. இளவயது திருமணம் கல்வித் தகுதி, வரதட்சணை, குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் ஆரோக்கியமான நிலை ஆகியவற்றில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது வெளிப்படுகின்றது.

## 3. கலந்துரையாடலும் பெறுபேறுகளும்

இவ்வாய்வின் பொருட்டு பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் முழுமையான முறையில் வகைப்படுத்தப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய காலகட்டத்தில் அதிகரித்து வருகின்ற சமூகப் பிரச்சினைகளுள் இளவயது திருமணமும் பல்வேறுபட்ட சமூக, பொருளாதார, கலாசார ரீதியில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்ற காரணியாக மாவடிவேம்பு – 01 கிராமசேவகர் பிரிவில் இனங்காணப்பட்டுள்ளதுடன் குறித்த பிரதேசத்தில் அதிகளவில் இளவயது திருமணங்களும் இடம்பெற்றுவருகின்றமையும் இவ்வாய்வின் மூலம் கண்டறியக்கூடியதாக இருந்தது.

அத்துடன் இவ்வாய்வின் பொருட்டு தெரிவுசெய்யப்பட்ட 100 மாதிரிகளில் இளவயது திருமணத்தினை மேற்கொண்ட வயதுப்பிரிப்பு, பால் அடிப்படையிலான விபரம், கல்வி நிலை, சுகாதார நிலை, பொருளாதார நிலை, குடும்ப அமைப்புக்கள், வாழ்க்கை நிலைமைகள், இளவயது திருமணம் மேற்கொள்வதற்கான காரணங்கள், குறித்த வயதில் திருமணம் செய்ததால் எதிர்நோக்கும் உடல், உள, சமூக, பொருளாதார, கலாசார ரீதியான சவால்கள் என பலவாறான விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டு தரவுகள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.


### 3.1. இளவயது திருமணத்தை தூண்டும் காரணிகள்

#### 3.1.1. திருமண வயது எல்லை மற்றும் பால்நிலை தொடர்பான விபரம்

இலங்கை சட்டத்தில் திருமணத்திற்கான சம்மதம், ஆகக்குறைந்த வயதெல்லை, திருமண பதிவு மீதான சமவாயம் (1949.12.02) என்பதில் 18 வயதுக்குட்பட்டவர்கள் திருமணம் செய்வது சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகும்.

ஆனால் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 மாதிரிகளில் 18 வயதை விட குறைந்த வயதுப்பிரிவில் திருமணம் செய்து கொண்டுள்ள ஆண், பெண் ஆகிய இருபாலாரும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் ஆய்வுப்பிரதேசத்தில் 56

வீதமானவர்கள் இளவயதில் திருமணம் செய்து கொண்ட ஆண், பெண் இருபாலாருமாக காணப்படுகின்றதோடு 44 வீதமானவர்கள் 18 வயதை அடைந்த பின்னர் திருமணம் செய்து கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இவ் 56 வீதமானவர்களில் 52 வீதமானவர்கள் பெண்களாகவும், 4 வீதமானோர் ஆண்களும் ஆவார்.




இளவயதில் திருமணம் செய்து கொண்ட 56 வீதமானவர்களின் வயது அடிப்படையில் நோக்கும் போது 13, 14, 15, 16, 17 ஆகிய வயதுப்பிரிவில் திருமணம் செய்து கொண்டவர்களாக காணப்படுகின்றனர். 4 வீதமானோர் 13 வயதில் திருமணம் செய்தவர்களாகவும், 4 வீதமானோர் 14 வயதில் திருமணம் செய்தவர்களாகவும், 12 வீதமானோர் 15 வயதில் திருமணம் செய்தவர்களாகவும், 20 வீதமானோர்கள் 16 வயதில் திருமணம் செய்தவர்களாகவும், 16 வீதமானோர் 17 வயதில் திருமணம் செய்தவர்களுமாக காணப்படுவதோடு இளவயதில் திருமணம் செய்து கொண்ட ஆண்கள் 4 வீதமானோர்களும் 17 வயதிலேயே திருமணம் செய்தவர்களாக காணப்படுகின்றனர்.

| ஆண்கள் (56 வீதத்தில்) | பெண்கள் (56 வீதத்தில்) |
|---|---|
| 4% | 52% |

எனவே 17 வயதில் திருமணம் செய்தவர்களில் 12 வீதமானோர் பெண்களாகவும், 4 வீதமானோர் ஆண்களாகவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

எனவே ஆய்வுப்பிரதேசத்தில் இளவயதில் திருமணம் செய்துகொள்பவர்களில் பெண்களே அதிகமாக காணப்படுவதோடு, இளவயதில் திருமணத்தை மேற்கொள்ளும் வயதெல்லையாகவும், அதிகமானோர் திருமணம் செய்து கொண்டுள்ள வயதெல்லையாகவும் 16 வயதுப்பிரிவு காணப்படுகின்றது.


### 3.1.2. கல்வி நிலை

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களின் கல்வி நிலையை நோக்கும் போது 50 வீதமானவர்கள் 8ம் தரத்திற்கு குறைவாக கல்வி பயின்றவர்களாகவும், 36 வீதமானவர்கள் 8 - 9 ம் தரம் வரை கல்வி பயின்றவர்களாகவும், 10

வீதமானவர்கள் 10ம் தரம் வரை கல்வி பயின்றவர்களாகவும், 4 வீதமானவர்கள் 11ம் தரம் வரை கல்வி பயின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இதிலிருந்து நோக்கும் போது மிகவும் குறைந்த கல்வி மட்டம் உடையவர்களே இளவயது திருமணம் செய்து கொண்ட தரப்பினராக காணப்படுகின்றனர். (இளவயதில் திருமணம் செய்த 56 வீதத்தினரை 100 வீதமாக கொண்டு கணிக்கப்படுகின்றது.)

### 3.1.3. குடும்ப பொருளாதார நிலை

குடும்ப நிலையை நோக்கும் போது பொருளாதாரம் என்பது முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களின் பொருளாதார நிலையை நோக்கும் போது மிகவும் குறைந்த வருமானமுடைய குடும்பங்களாகவே காணப்பட்டனர். 5000 ரூபாவை மாதாந்தம் பெறுபவர்களாக 2 வீதமானவர்களாகவும், 6,000 - 10,000 ரூபாவை பெறுபவர்களாக 44 வீதமானவர்களும், 11,000 – 15,000 ரூபாவை பெறுபவர்களாக 54 வீதமானவர்களும் காணப்படுகின்றனர். எனவே 11,000 – 15,000 ரூபாவை மாதாந்தம் பெறுபவர்களே அதிகமாக காணப்படுகின்றனர்.




### 3.1.4. ஏனைய காரணிகள்

இளவயது திருமணம் மேற்கொள்வதற்கான காரணம் தொடர்பாக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 மாதிரிகளிடம் வினவும் போது 30 வீதமானவர்கள் வறுமை காரணமாக திருமணம் செய்து கொண்டதாகவும், 12 வீதமானவர்கள் வீட்டாரின் கட்டாயப்படுத்தலினால் திருமணம் செய்து கொண்டதாகவும், 14 வீதமானவர்கள் தொலைத்தொடர்பு சாதனங்களின் அதிகரிப்பும், காதலால் வீட்டாரின் சம்மதமின்றியும் திருமணம் செய்ததாகவும், 10 வீதமானவர்கள் யுத்தம் காரணமாக திருமணம் செய்து கொண்டதாகவும், 14 வீதமானவர்கள் பாதுகாப்புத்தேவைக்காக திருமணம் செய்ததாகவும் (பெற்றோரை இழந்த நிலை, பெற்றோர், மற்றும் பாதுகாவலர் இன்மை, யுத்தம்), 20 வீதமானவர்கள் போதிய

கல்வியறிவின்மையாலும், பாடசாலை இடைவிலகலாலும் திருமணம் செய்ததாக குறிப்பிட்டனர்.

அடுத்து இளவயது திருமணத்தால் ஏற்படும் சமூக, பொருளாதார, கலாசார, சட்ட ரீதியான பிரச்சினைகளை நோக்கும் போது அவை பரந்துபட்டதாகவே அமைந்து காணப்படுகின்றது. அதாவது சமூகம் என்பது பல்வேறு சமூக நிறுவனங்களை கொண்ட அமைப்பாகும். அவ்வமைப்பினுள் திருமணம் என்பது இன்றிமையாத ஆக்கக்கூறாகும். ஒரு சமூகத்தின் ஒழுங்கையும், தனிமனிதனின் நடத்தையையும் தீர்மானிப்பதில் முக்கிய பங்காளரான திருமணமானது முறையாக அமையாவிட்டால் அது சமூகத்திலுள்ள ஒட்டுமொத்த சமநிலையையும் சீர்குலைக்கின்ற வகையில் அமைந்துவிடும். அத்துடன் ஏனைய சமூக நிறுவனங்களாக குடும்பம், கல்வி, பொருளாதாரம், சமயம் என அனைத்து கூறுகளிலும் பாதகமான விளைவுகளை உண்டுபண்ணும். இவ்வகையிலேயே ஆய்வுப்பிரதேசத்தில் சமூகத்தின் ஒழுங்கில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் காரணியான இளவயது திருமணமானது இப்பிரதேசத்தில் குறித்த தரப்பினரை மட்டுமின்றி அதனோடு தொடர்புபட்ட வகையில் உடல், உள, சமூக, பொருளாதார, கலாசார, சட்ட ரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது.

### 3.2. இளவயது திருமணம் ஏற்படுத்தும் தாக்கங்கள்

ஆய்வுப்பிரதேசத்தில் சமூக சமநிலையை குழப்பும் காரணிகளில் ஒன்றான இளவயது திருமணமானது சமூக ரீதியாக பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக விவாகரத்து, பிரிந்து செல்லல் அல்லது மறுமணம் செய்தல், பாதுகாப்பு இன்மை, உதவியின்மை (கணவர், மனைவி ஆகியோரது பெற்றோர்களின் சீரான உதவியின்மை), உறவு நிலையில் பாதிப்பு, பெண்தலைமைத்துவ குடும்பங்களாதல், குடும்ப ஒருங்கிணைவு மற்றும் இடைத்தொடர்பின்மை, குடும்ப பிணக்குகள் அதிகரித்தல், முரண்பாடு ஏற்படல், வறுமை, அடிப்படை வசதிகள் பூர்த்தியாக்கப்படாத நிலைமை, தற்கொலை, சமூக நல்லிணக்கம்/ சமூக ஒருமைப்பாடு இன்மை, பெண்கள் வெளிநாடு செல்லல்/ வெளியிடத்திற்கு தொழிலுக்கு செல்லல், முடிவெடுக்கும் திறன் இன்மை, தலைமைத்துவம் இன்மை, தன்னம்பிக்கை இன்மை, தொடர்பாடல் திறனை வளர்க்க முடியாமை, முகாமைத்துவ திறன் இன்மை, ஒழுங்கமைக்கும் திறன் இன்மை, சமுதாயத்தில் பங்கேற்க முடியாமை என பல்வேறு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. இவை குறித்த தரப்பினரை மாத்திரமின்றி அக்குடும்பத்திலுள்ள சிறுவர்களையும் பல்வேறு விதத்தில் பாதிக்கின்றது.

#### 3.2.1. சமூகம் சார்ந்த தாக்கங்கள்

அவ்வகையில் ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 மாதிரிகளில் இளவயது திருமணத்தை மேற்கொண்ட 56 வீதமானவர்களில் (100 வீதமாகக் கொண்டு ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் நூற்று வீதம் கணிக்கப்படுகின்றது). 46 வீதமானவர்கள் விவாகரத்து , பிரிந்து வாழ்தல், மறுமணம் செய்தல் போன்ற சமூக ரீதியான விளைவுகளுக்கு உட்பட்டவர்களாக காணப்படுகின்றனர்.
65 வீதமானவர்கள் பாதுகாப்பு, உதவியின்மை என்ற பிரச்சினைக்கு (கணவர், மனைவி ஆகியோரது பெற்றோர்களுடன் சீரான உதவியின்மை) முகங்கொடுப்பவர்களாக காணப்படுகின்றனர். அதாவது பெற்றோர் தமது

பிள்ளைகளை பராமரிப்பது சுமையாக கருதி வறுமை, பாதுகாப்புத்தேவை என்ற பல காரணங்களுக்காக இளவயதில் திருமணம் செய்து கொடுப்பதானது குறித்த நபர்கள் உதவியின்மை, பாதுகாப்பு இன்மை என்ற எதிர்மறையான விளைவுகளுக்கு முகங்கொடுக்க காரணமாகின்றது. அதாவது கணவர் தொழில் நிமிர்த்தம் வெளியிடத்திற்கு செல்வதாலும், பெற்றோரின் விருப்பமில்லாமல் திருமணம் செய்வதும், இளவயதில் திருமணம் செய்து விவாகரத்து, பிரிந்து வாழ்தல், மறுமணம் செய்தல் போன்றவற்றிற்கு உட்பட்டு பாதுகாப்பு இன்மை, உதவியின்மை போன்ற சமூகப்பிரச்சினைக்கு முகங்கொடுக்கின்ற சந்தர்ப்பம் இவ்வாய்வுப்பிரதேசத்தில் கண்டறியப்பட்டுள்ளது.

அடுத்து 78 வீதமானவர்கள் இளவயது திருமணமானவர்கள் உறவு நிலையில் பாதிப்பை எதிர்கொள்வதாக குறிப்பிட்டனர். குறிப்பாக முதிர்ச்சி நிலையை அடையாத வயதில் திருமணம் செய்து கொண்டமையால் விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு நிலையற்றவர்களாக காணப்படுகின்றனர். இதனால் கணவர், மனைவிக்கிடையில் முரண்பாடு ஏற்படல், பெற்றோருடன் முரண்பாடு ஏற்படல், அயலவர்களுடன் முரண்படல் என்றவாறு முரண்பாடு அதிகரித்து உறவு நிலையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் முரண்பாடான சமூகச் சூழல் அதிகரிக்கின்றது. இவ் முரண்பாட்டு சூழ்நிலை விவாகரத்து, பிரிந்துவாழல், மறுமணம் செய்தல் என்ற பல முரண்பாடுகள் ஏற்பட வழிவகுக்கின்றது.

குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் அதிகளவான இளவயது திருமணங்கள் இடம்பெற்றமையானது இளவயதிலேயே விவாகரத்து பெறல், கணவனை இழத்தல், பிரிந்து வாழல், கணவன் மறுமணம் செய்தல் போன்றவற்றிற்கு முகங்கொடுத்து பெண்கள் தலைமைதாங்கும் குடும்பமாகவும் காணப்படுகின்றனர். அவ்வகையில் 56 வீதமானவர்கள் பல காரணங்களுக்காக இளவயதில் திருமணம் செய்து கொண்டு குடும்ப சுமையை பெண்களாகவே பொறுப்பேற்கும் பெண்தலைமைத்துவ குடும்பங்களாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் இவ்வாறு முரண்பாடு, கணவன், மனைவிக்கிடையில் புரிந்துணர்வின்மை, விட்டுக்கொடுப்பின்மை, கடன்சுமை, வறுமை போன்ற பல காரணிகளால் இளவயதில் திருமணம் செய்த குடும்பங்களில் ஆண், பெண் என இருதரப்பினரும் தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவங்களும் இடம்பெற்றுள்ளது. குறிப்பாக 2016-2020 வரை 3 தற்கொலை (2 பெண்கள், ஆண் ஒருவர்) சம்பவங்கள் இளவயது திருமணம் செய்துகொண்டுள்ள குடும்பங்களில் பதிவாகியுள்ளது. இதற்கு நுண்கடனும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

அத்துடன் குறித்த பிரதேசத்தில் இளவயது திருமணம் செய்து கொண்டுள்ள பெண்களில் அதிகமானவர்கள் வெளிநாட்டிற்கும், வெளியிடத்திற்கும் தொழிலுக்கு சென்று தற்சமயம் வீட்டில் இருப்பவர்களாகவும் சிலர் வெளிநாட்டில் பணிபுரிபவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வகையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 23 வீதமானவர்கள் வெளிநாட்டு பணிப்பெண்களாக சென்றவர்களாக காணப்படுகின்றனர்.

அத்துடன் 67 வீதமானவர்கள் சமூக நல்லிணக்கம், சமூக இடைத்தொடர்பு இல்லாதவர்களாகவும் தமது குடும்ப பிரச்சினைகளால் ஏனையவர்களுடன் நல்லுறவுடன் வாழமுடியாதவர்களாகவும் காணப்படுவதாக குறிப்பிட்டனர்.

இவ்வாறான பிரச்சினைகளால் குறித்த தரப்பினர் சமூகத்தில் இருந்து ஓரங்கட்டப்படுவதற்கும், புறக்கணிக்கப்படுவதற்கும் காரணமாக அமைகின்றது. அதாவது கடன்சுமை, வறுமை, குடும்ப பிரச்சனைகள், மறுமணம் செய்தல், விவாகரத்து போன்றவற்றால் கலாசார நிகழ்வுகளில் பங்கேற்க முடியாமல் புறக்ணிக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்ட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவதாக 16 வீதமானவர்கள் தெரிவித்தனர்.

### 3.2.2. பொருளாதார தாக்கங்கள்

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இளவயது திருமணம் செய்த குடும்பங்களில் 88 வீதமானவர்கள் வறுமை நிலையிலேயே இன்றும் காணப்படுகின்றனர். 56 வீதமானவர்கள் தொழிலற்றவர்களாக காணப்படுகின்றனர். அவர்களில் 75 வீதமானவர்கள் அடிப்படைத் தேவைகளான இருப்பிட வசதிகள், மலசலகூட வசதிகள், குடிநீர், மின்சாரம் இல்லாதவர்களாகவும் அடிப்படைத்தேவைகளை பூர்த்தி செய்யாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.

### 3.2.3. உடலியல் சார், உளவியல் சார் தாக்கங்கள்

இளவயது திருமணம் செய்து கொண்டவர்களில் 24 வீதமானவர்கள் குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் ஊட்டச்சத்து குறைபாடுடையவர்களாகவும், போதிய போசாக்கின்மையானவர்களாகவும் இருப்பதும் குடும்பநல உத்தியோகஸ்தர் மூலம் அறிந்துகொள்ளக்கூடயதாக இருந்தது. அத்துடன் ஆய்வுப்பிரதேசத்தில் இளவயது திருமணம் செய்து கொண்ட குடும்பங்களில் 11 பிள்ளைகள் அங்கவீனர்களாகவும், 12 சிறுவர்கள் குறைந்த போசாக்கு மட்டம் உள்ளவர்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வகையில் ஆய்வுக்குட்டபட்ட 100 மாதிரிகளில் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தவர்களாக 16 வீதமான பெண்கள் காணப்படுவதும், 4 பிள்ளைகள் குறைந்த போசாக்கு மட்டம் கொண்டவர்களாகவும், 5 பிள்ளைகள் அங்கவீனர்களாக இருப்பதும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

சிசுமரணம் 10 வீதமானவர்களுக்கு இடம்பெற்றதாகவும், கருச்சிதைவு 15 வீதமானவர்களுக்கு இடம்பெற்றதாகவும் குறிப்பிட்டனர். இவ்வாறு உடல், உள ரீதியான பாதிப்புக்களுக்கு இளவயது திருமணமும் காரணமாக அமைகின்றது.
அத்துடன் குடும்பத்தில் இடம்பெறும் முரண்பாடுகளாலும், கணவன் மது அருந்துவதாலும் அடித்தல், துன்புறுத்தல், வற்புறுத்தலால் குறிப்பாக பெண்கள் உடல், உள ரீதியாக பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான பாதிப்புக்கு உள்ளாகுபவர்களாக 65 வீதமானவர்கள் காணப்படுகின்றனர்.
இளவயதில் திருமணம் செய்வதால் குடும்பத்தில் எவ்வாறு வாழவேண்டும் என்ற பக்குவமும், அதுதொடர்பான புரிந்துணர்வு, விழிப்புணர்வு இன்மையாலும் உளரீதியாக பாதிப்புக்களுக்கும் உள்ளாகின்றனர். குறிப்பாக கணவன், மனைவிக்கிடையிலான சந்தேகம், குடும்ப பிரச்சினைகளால் ஏற்படும் விரக்தி, கோபம், மன உழைச்சல் என்பன உள ரீதியாக பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 45 வீதமானவர்கள் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

### 3.2.4. சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள்

இவ்வாறு சமூக, பொருளாதார பிரச்சினைகளுக்கு பெற்றோர்கள் முகங்கொடுப்பதால் அக்குடும்பத்திலுள்ள சிறுவர்கள் உடல், உள, கல்வி ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். இதனால் குறித்த பிரதேசத்தில் அதிகளவான பாடசாலை இடைவிலகல் ஏற்படுவதும், சிறுவர் தொழிலாளர்கள் காணப்படுவதும், சிறுவர்கள் மதுபாவனைக்கு உட்படுவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான பாதிப்புக்களுக்கு உட்படுபவர்களாக குறிப்பாக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குடும்பங்களில் 36 வீதமான சிறுவர்கள் பாடசாலை இடைவிலகலை மேற்கொண்டவர்களாகவும், 23 வீதமானவர்கள் சிறுவர் தொழிலாளர்களாகவும் காணப்படுகின்றனர். அத்துடன் அதே குடும்பத்திற்குள் மீண்டும் மீண்டும் இளவயது திருமணம் செய்து கொண்ட சிறுவர்களும் காணப்படுகின்றனர்.
இளவயது குடும்பத்தில் உள்ள சிறுவர்கள் நேரடியாக பாதிக்கப்படுவது போன்று அக்குடும்பத்திலுள்ள முதியவர்களும் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக 60 வயதிற்கு மேற்பட்ட 75 வீதமான முதியவர்கள் தாங்கள் போதியளவு உணவை உண்ண வசதியற்றவர்களாகவும், பராமரிப்பற்றவர்களாகவும் காணப்படுவதாக குறிப்பிட்டனர்.

### 3.2.5. சட்ட ரீதியான பிரச்சினைகள்

அடுத்து இளவயது திருமணமானது குறித்த தரப்பினர் மத்தியில் சட்டரீதியான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது. இலங்கையின் திருமணச் சட்டத்தின்படி 18 வயதின் கீழ் திருமணப்பதிவு செய்வது சட்டவிரோதமானது என்கின்றது. அவ்வடிப்படையில் குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் இளவயது திருமணத்தை மேற்கொண்டவர்களிடம் திருமணம் தொடர்பான வயதெல்லை, தகைமை பற்றிய சட்ட ரீதியான அறிவு காணப்படுகின்றதா என வினவியபோது 40 வீதமானவர்களே ஆம் என்ற பதிலை அளித்தனர். 60 வீதமானவர்கள் அது தொடர்பான தெளிவல்லாதவர்களாக காணப்படுகின்றனர். அத்துடன் இளவயதில் திருமணம் செய்தவர்களில் 35 விதமானவர்கள் தற்போதும் திருமணப்பதிவு இல்லாதவர்களாகவும் 18 வயதை அடையாதவர்களாக காணப்படுகின்றனர். அத்துடன் இவ்வாறான திருமணப்பதிவின்மையால் 25 வீதமானவர்கள் கணவனை பிரிந்தும், விதவையான நிலையில் அதற்கான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க முடியாதவர்களாகவும், குழந்தைகளுக்கான தாபரிப்பு பணத்தை கூட சட்ட ரீதியாக பெற முடியாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அத்தடன் இவ்வாறு சட்டரீதியாக திருமணப்பதிவின்மையாலும், கணவரால் கைவிடப்பட்ட நிலையிலும் பிள்ளைகளுக்கு பிறப்புச்சான்றிதழை கூட பெறமுடியாத பெண்களும் இவ்வாய்வில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறு குழந்தைகளுக்கு திருமணப்பதிவை வைக்காததால் எதிர்காலத்தில் அக்குழந்தை கல்வி ரீதியாக பிரச்சினைக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலையும், பாடசாலையில் கல்வியை தொடரும் பட்சத்தில் பாடசாலையில் அனுமதியை பெறமுடியாத சூழ்நிலையும் உருவாக உள்ளது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பவர்களாக 3 பெண்களும், அவர்களது 3 குழந்தைகளும் காணப்படுகின்றனர்.

எனவே இவ்வாய்வுப்பிரதேசத்தில் இளவயது திருமணமானது அதிகளவில் இடம்பெறுவதும் இதனால் பல்வேறு சமூக, பொருளாதார, கலாசார, உடல், உள, சட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய நிலைமையும் காணப்படுவது இவ்வாய்வின் மூலம் வெளிப்படுகின்றது.

## 4. தீர்வாலோசனைகள்

இளவயது திருமணம் மூலம் மாவடிவேம்பு – 01 கிராம சேவக பிரிவில் மேற்கூறப்பட்டவாறு ஏற்படும் சமூக, பொருளாதார, கலாசார, உடல், உள, சட்ட ரீதியாக குறித்த தரப்பினர் பல்வேறு எதிர்மையான விளைவுகளையே எதிர்நோக்குகின்றனர். இதனை தவிர்க்கும் முகமாக சில தீர்வாலோசனைகள் ஆய்வாளரால் முன்வைக்கப்படுகின்றன.

4.1. அதிகரித்து வருகின்ற இளவயது திருமணத்தை உடனடியாக தடுத்து நிறுத்துதல்.

4.2. இளவயது திருமணத்தால் ஏற்படும் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

4.3. திருமணத்திற்கான வயதெல்லையை பூர்த்தி செய்த பின்னர் திருமணத்தில் இணைதல்.

4.4. இளவயது திருமணம் தொடர்பாக இலங்கையில் காணப்படும் சட்டங்கள் பற்றிய தெளிவினை ஏற்படுத்தல்.

4.5. இளவயது திருமணம் ஏற்படுவதற்கான காரணங்களை மக்கள் மத்தியிலும், அதிகாரிகள் மத்தியிலும் எடுத்துக்கூறி அக்காரணங்களை இயன்றளவு குறைக்க நடவடிக்கை எடுத்தல்.

4.6. வறுமை என்பது இளவயது திருமண ஏற்பட முக்கிய காரணமாக இருப்பதால் இதற்கான மாற்றுவழிகளை கண்டறிந்து மூலவளங்களை பெற்றுக்கொடுத்து அதற்கூடாக வருமானத்தை ஈட்டக்கூடிய தொழில்களை நடைமுறைப்படுத்தல்.

4.7. கணவன், மனைவி இருவருக்கும் உளவளத்துணை தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்.

4.8. பெற்றோரின் விருப்பத்துடன் திருமணப்பந்தத்தில் சட்டரீதியாக இணைதல்.

4.9. திருமணப்பதிவை திருமணமான அன்றே வைக்கக் கூடிய வயதுப்பருவத்தில் திருமணம் செய்தல் வேண்டும்.

4.10. கணவன், மனைவிக்கிடையில் புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, பக்குவம் போன்ற பண்புகளை வளர்த்துக்கொள்ளல்.

4.11. பாடசாலைக்கல்வியை இடைவிடுவதை இல்லாதொழித்து முழுமையாக பூர்த்திசெய்யக்கூடிய வகையிலும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் மக்களிடத்தில் எடுத்துக்காட்டல்.

4.12. இளவயதில் திருமணம் செய்யும் தரப்பினரை சட்டத்தின் கீழ் நிறுத்தல்.

4.13. குடும்ப பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் குடும்பங்களுக்கு முடிந்தளவு ஆலோசனைகளை வழங்கி ஒன்றாக இணைய ஊக்குவித்தல்.

4.14. பாதிக்கப்படும் சிறுவர்களையும், முதியவர்களையும் சிறுவர் இல்லங்களில், முதியோர் இல்லங்களில் இணைப்பதோடு சிறுவர்கள் கல்வியை தொடர உதவி செய்தல்.

4.15. இளவயதில் திருமணம் செய்து விதவையாகிய பெண்தலைமைத்தவ குடும்பங்களது வருமானமட்டத்தை உயர்த்தக்கூடிய சிறு தொழில் முயற்சிகளையும் அதற்கான மூலதனத்தையும் வழங்குதல்.

4.16. ஊட்டச்சத்துகுறைபாட்டால் பாதிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகளுக்கு தேவையான போசாக்கு உணவுகளை சுகாதார அமைப்புக்களுக்கூடாக வழங்குதல்.

4.17. இளவயதில் திருமணம் இடம்பெற்ற அதனால் இடம்பெறும் பிரச்சினைகளை குடும்பநல உத்தியோகஸ்தர், பிரதேச செயலக அதிகாரிகள், சிறவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், கிராமசேவகர்களுக்கூடாக அறியத்தருதல்.

4.18. இளவயது திருமணமத்தால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்களும், குழந்தைகளுமாக காணப்படுவதால் சமுதாயத்தில் அது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல்.

4.19. கிராமத்திலுள்ள சமுதாயமட்ட ரீதியிலான அமைப்புக்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களுக்கு குறித்த பிரதேசத்து மக்களது நிலைமைகளை எடுத்துக்கூறி இனிவரும் காலங்களில் இளவயது திருமணம் ஏற்படுவதை தடுத்தல்.

இவ்வாய்வினூடாக இனங்காணப்பட்ட பிரச்சினைகளின் அடிப்படையில் ஆய்வுப்பிரதேசத்தில் இளவயது திருமணம் அதிகரிப்பதை தடுப்பதையும், அதனால் ஏற்பட்டுவருகின்ற சமூக, பொருளாதார, கலாசார, உடல், உள, சட்ட பிரச்சினைகளுக்கு முன்வைக்கப்பட்ட இத்தீர்வாலோசனைகள் மூலம் சிறந்த நல்லிணக்கமுள்ள முரண்பாடற்ற சமூகத்தை கட்டியெழுப்பி கல்வியில் உயர்ந்த சமுதாயத்தை உருவாக்கலாம் என்பது ஆய்வாளரது கருத்தாக அமைகின்றது.

## 5. முடிவுரை

இன்றைய சமுதாயத்தில் அதிகரித்துவருகின்ற சமூகப்பிரச்சினைகளும் இளவயது திருமணமும் முக்கியமானதாக மாவடிவேம்பு – 01 பிரதேசத்தில் அடையாளங்காணப்பட்டுள்ளது. இளவயது திருமணம் எறுபடுவதற்கு பாடசாலை இடைவிலகள், குடும்ப வறுமை, பாதுகாப்பின்மை, வயதெல்லை, பால், குறைவான கல்விமட்டம், காதல் தொடர்பு, நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் அதிகரிப்பு போன்ற பல காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான காரணங்களால் ஏற்படும் இளவயது திருமணமானது குறித்த தரப்பினரை மாத்திரமின்றி ஒட்டுமொத்த சமூகத்தையுமே நலிவுற்ற பிறழ்வான சமூகமாக மாற்றுகின்றது. குறிப்பாக கடன்சுமை, வறுமை, விவாகரத்து, மறுமணம், கணவனை இழத்தல், கணவனை பிரிதல், தற்கொலை, குடும்ப ஒருமைப்பாடு இன்மை, குடும்ப பிரச்சினைகள் அதிகரித்தல், சுகாதார ரீதியான பிரச்சினைகள், சட்டரீதியான பிரச்சினைகள் என பல பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறான பிரச்சினைகளுக்கான தீர்வாலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது. தற்போது நிலவுகின்ற கொவிட் - 19 சூழ்நிலைகளில் கூட அதிகரித்து வருகின்ற தொடர்பாடல் சாதனங்களாலும், பொருளாதார பிரச்சினைகளாலும் பாடசாலையில் கல்வி

பயில்கின்ற சிறுவர்களுக்கு திருமண பேச்சவார்த்தைகள் இடம்பெறுவதும், காதல் தொடர்புகள் ஏற்படுவதும், இளவயதிலேயே திருமணப்பந்தத்தில் சிறுவர்கள் இணைவதற்கான சூழ்நிலைகள் குறித்த பிரதேசத்தில் நிலவுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமைகள் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட வேண்டும். எனவே இனிவரும் காலங்களில் குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் இடம்பெறும் இளவயது திருமணங்களை தடுத்து இன்றைய சிறுவர்களை நாளைய தலைவர்களாக உருவாக்கக்கூடிய விழிப்புணர்வுடன் மக்கள் செயற்பட வேண்டியது கட்டாயமானதாகும்.

**உசாத்துணைகள்**


01. Amarasiri de Silva, (2009), Desk Review and basic filed data on child marriages, Statutory Rape and under age sex, UNICEF, Colombo, pp: 01-35. (https://www.ohchr.org/documents/issues/women/wrgs/forcedmarriage/ngo/amarasiridesilva.pdf).
02. Dana Tilson & Ulla Larsen, (2000), *Divorce in Ethiopia: The impact of early marriage and childlessness,* Journal of Biosocial Science, Volume 32, Issue 3, July 2000, pp:355-372.
03. Hilma.L.F, Siyana. M.M, Hifra. M.F.M, Rakshana. F, (2018), Early marriage and its impact on Muslim Women (Based on Sambunagar & AAlangulam Areas), 5 th International Sysmposium 2018, pp: 01-09.
04. Ifna Rosydah, Taty Hernawaty & Imas Rafiyah, (2019), *The impact of early marriage on pregnancy : Young Women's knowledge*, Journal of Maternity care and Reproductive Health, ISSN 2621-8992, Vol 2, No 2.
05. Ilknur Yüksel-Kaptanoglu & Banu Akadli Ergocmen, (2014), *Early Marriage. Trends in Turkey, 1978-2008*, Journal Article - Journal of Family Issues, Volume: 35 issue: 12, pp:1707-1724.
06. Khanna.T & Verma.R, (2013), Child Marriage in South Asia: Realities, Respones and the way forward, International center for Research on Woman, PP: 01-20.
07. Prosannajid Sarkar, (2009) *Determinants and effect of early marriage in Bangladesh*, 2007, Research Journal of Applied Sciences 4(5), ISSN – 1815-932x, pp: 178-184.
08. Saima Mughal, Ghafoor Abdul & Dr.Abdul Ghafoor Awan, (2020), *Effects of Early Marriages on Girls' Education*, Global Journal of Management, Social Sciences and Humanities, Vol 6 (4), pp.856-.875-894.
09. Savitri Goonesekere & Harini Amarasuriya, (2013), Emerging concerns and case studies on child marriage in Srilanka, UNICEF Sri Lanka, pp: 01-72. (http://www.iccwtnispcanarc.org/upload/pdf)

10. Seri Aryati, Sofi Yulianti & Rahma Hardinasari, (2020), *Early marriage in Yogyakarta*, E3S Web of Conferences 200, 04003 (2020), pp: 01-07
11. Srinivas Goli, Anu Rammohan & Deepti Singh, (2015), *The Effect of Early Marriages and Early Childbearingon Women's Nutritional Status in India,* Maternal and Child Health Journal, Volume. 19, pp: 1864-1880.
12. Suresh Lal. B, (2015 ), *Child Marriage in India: Factors and Problems*, International Journal of Science and Research (IJSR), Volume 4, pp: 2993-2998.
13. UNICEF Innocenti Research Centre, (2001), Early Marriage: Child Spouses, United Nations Children's found Innocenti Research centre, Florence, Italy, PP: 01-30.
14. Weekly Epidemiological Report, (2013), Child Marriages, A publication of the Epidemiology Unit Ministry of Health, Vol. 40 No.11, pp: 01-04.
15. Zannatul Ferdous Shammi, Md. Thuhid Noor Muinul Habib Noman & Md. Mahadi Hasan, (2018), *Impact of Child Marriage on the Slum People of Rangpur City*, Journal Of Humanities And Social Science (IOSR-JHSS) , Volume 23, pp: 71-80.